# ஸுன்னா - ஓர் அறிவியல் கண்ணோட்டம்

[illegible]ஹரி விரிவுரையாளர் எம். ஏ. எம். ஸபர் (பஹ்ஜி, B.A மதீனா)

بسم الله الرحمن الرحيم

قال الله تعالى " وأنزلنا إليك الذكر لتبين للناس ما نزل إليهم ولعلهم يتفكرون" (16:44)

அல்லாஹ்தஆலா தனது திருமறையில் பின்வருமாறு கூறுகின்றாகிறான்: **"அவர்களுக்கு இறக்கப்பட்டதை நீங்கள் மனிதர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகவும் மேலும் (மக்களாகிய) அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும், நாம் அல்-குர்ஆனை உம்மீது இறக்கி வைத்தோம்."** குர்ஆனை தெளிவுபடுத்துவது நபியின் பொறுப்பு. அதனைச் சிந்திப்பதும், அதனடிப்படையில் தெளிவு பெறுவதும் சமூகத்தின் பொறுப்பு என இங்கே இரண்டு பொறுப்புக்களை அல்லாஹ்தஆலா முன்வைத்துள்ளான்.

நபி (ﷺ) தெளிவுபடுத்தாவிட்டால் அவர்கள் தனது பொறுப்பைச் செய்யாத குற்றத்திற்கு ஆளாக வேண்டிவரும். يا أيها الرسول بلغ ما أنزل إليك من ربك وإن لم تفعل فما بلغت رسالته (5:67) **"தூதரே! உங்களுக்கு இறக்கி வைக்கப்பட்ட (வேதத்)தை எத்தி வையுங்கள். நீங்கள் அதைச் செய்யாவிடின் அவனது தூதுத்துவத்தை நீர் எத்திவைக்கவில்லை".** என்ற திரு வசனத்தின் அடிப்படையில் நபிகளார் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார்கள். கடைசி ஹஜ்ஜின் போது தனது பொறுப்பை ஒப்படைத்து விட்டதை ஸஹாபாக்கள் ஏற்றுக்கொள்ள, அதற்கு அல்லாஹ்வை சாட்சியாக இருக்குமாறு வேண்டினார்கள்.

இந்த வேதத்தை, நாம் விளங்குவதும் அதனைப் பற்றி சிந்திப்பதும் எமது கடமையாகும். தவறும் பட்சத்தில் (47:24) أفلا يتدبرون القرآن أم على قلوب أقفالها **"அவர்கள் அல்குர்ஆனை ஆராய வேண்டாமா அல்லது அவர்களின் உள்ளங்களில் பூட்டுக்கள் போடப்பட்டுள்ளனவா?"** என்ற திருவசனத்தை புறக்கணித்தவர்களாகவும் மறுமையில (25:30) وقال الرسول يا رب إن قومي اتخذوا هذا القرآن مهجورا **"இறைவா நிச்சயமாக என்னுடைய கூட்டத்தினர் இந்தக் குர்ஆனை ஒதுக்கிவிட்டார்கள்."** என்ற இறைத்தூதரின் முறைப்பாட்டுக்குட்பட்டவர்களாகவும் ஆகிவிடுவோம். அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக.

**ஸுன்னாவின் வகைகள்:**

இஸ்லாத்தின் உயிர்நாடி அல்குர்ஆனும், அஸ்ஸுன்னாவுமாகும். ஸுன்னா என்ற பிரயோகம் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பல அர்த்தங்களில் பாவிக்கப்படுகின்றன.

*I. நபிகளாரின் சொல், செயல், அங்கீகாரம் மற்றும் நபிகளாரின் உடலமைப்பு முறை, குண நெறிகள் என்பனவாகும். இதுவே ஹதீஸ் கலை சார்ந்த உலமாக்களின் வரைவிலக்கணமாகும்.*

2. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனிமையிலும், கூட்டத்திலும், ஊரிலும், பிரயாணத்திலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் அல்லாஹ்வுடன் மற்றும் மனிதர்களோடுள்ள தொடர்புகளிலும், குடும்பத்தாரோடும், அன்னியர்களுடனும், நேசர்களோடும், பகைவர்களோடும், சமாதானத்திலும், யுத்தத்திலும், ஆரோக்கியத்திலும், நோயிலும் கூறிய கூற்றுக்கள், செயல்படுத்திய செயல்கள், இன்னும் அங்கீகாரங்கள், தீர்ப்புக்கள் மற்றும் நடவடிக்கைகள் ஸுன்னாவாகும். இவ்வாறான ஒரு வரைவிலக்கணத்தையே "உஸூலிய்யூன்" எனப்படும் இஸ்லாமிய அடிப்படைச் சட்ட உலமாக்கள் கூறியுள்ளனர். ஸுன்னாவின் பெரும்பகுதி அல்குர்ஆனின் வியாக்கியானமாகவே அமைந்துள்ளது. அல்குர்ஆனின் செயல்முறை விளக்கமாகவே அஸ்ஸுன்னா இருந்தது என்பதை அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள் : كان خلقه القرآن **அவரது பண்பு குர்ஆனாகவே இருந்தது.**

3. வாஜிப் அல்லாத ஸுன்னாக்கள் உதாரணமாக தொழுகையில் பாத்திஹா ஓதுவது வாஜிபு. பாதிஹாவிற்குப் பின்னர் ஏதேனும் ஒரு ஸூரா ஓதுவது ஸுன்னா. வாஜிபை விடுவது குற்றம். ஸுன்னாவை விடுவது குற்றமாகக் கருதப்பட மாட்டாது. மார்க்கத்தீர்ப்புக்களில் ஸுன்னா என்பது இவ்வாறான பொருளையே குறிக்கின்றது.

4. பித்அத் என்ற பதத்துக்கு எதிர் மறையாகப் பாவிக்கப்படும் பதம் ஸுன்னாவாகும். உதாரணமாக அதானுக்குப் பின் ஸலவாத் சொல்வது ஸுன்னா. அதானுக்கு முன்னர் ஸலவாத்துச் சொல்வது பித்அத். நம்பிக்கைக் கோட்பாடு சார்ந்த விடயங்களைப் பேசும் போது இந்தக் கருத்தில் பாவிக்கப்படுவதை அவதானிக்கலாம்.

## ஸுன்னாவை விளங்குவது எவ்வாறு:

ஸுன்னாவை உத்தம ஸஹாபாக்கள் எவ்வாறு விளங்கினார்களோ அதனடிப்படையிலே நாமும் விளங்குவது அவசியமாகும். எப்பொழுது நாம் ஸுன்னாவை விளங்குகிறோமோ அப்போது அல்குர்ஆனிலும் பெரும்பகுதியை விளங்கினவர்களாகக் கருதப்படுவோம். இன்று இந்த ஸுன்னாவை ஒழுங்காக விளங்கப்படாததன் காரணமாகவே சமூகத்தில் பல பிளவுகளும், பிணக்குகளும் ஏற்பட்டுள்ளன.

அல்குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் தன் கைவசம் வைத்துள்ளான். (15 . 9) إنا نحن نزلنا الذكر وإنا له لحافظون **"நாமே குர்ஆனை இறக்கி வைத்தோம். அதனைப் பாதுகாப்பதும் நாமே."** என அல்லாஹ் கூறியுள்ளான். அதே போன்று ஸுன்னாவையும் அல்லாஹ் தனது நல்லடியார்களாகிய ஹதீஸ்துறை சார்ந்த உலமாக்கள் மூலமாகப் பாதுகாத்திருக்கின்றான். ஹதீஸில் யாரும் கைவைத்து விடக்கூடாது என்பதற்காக ஹதீஸை ஏற்றுக்கொள்ள பல நிபந்தனைகளையும், அடிப்படைகளையும் அவர்கள் நிறுவினார்கள். மேலும் எப்படியான ஹதீஸ்களை ஆதாரமாகக்கொள்ள முடியும், எவைகளை ஆதாரமாகக்கொள்ள முடியாது என்ற விளக்கத்தையும் எழுதியுள்ளார்கள். ஸுன்னாவில் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்பதற்காகவும் நினைத்தவர்களெல்லாம் நினைத்ததையெல்லாம் ஸுன்னா என்று சித்தரிக்கக்கூடாது என்பதற்காகவும் அறிவிப்பாளர் வரிசையின்றி ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அறிவிப்பாளர் வரிசை சொல்லப்பட்டாலும் அதில் அடங்கியோரின் விபரம் அறியாது ஸுன்னாவை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற முடிவுக்கு வந்தனர்.

இதனடிப்படையில் ஒரு ஹதீஸ் ஸஹீஹானது எனத் தீர்ப்புக் கூறுவதற்கு ஐந்து நிபந்தனைகள் அவசியம் என்றும் ஏதாவது ஒரு நிபந்தனையில் குளறுபடிகள் ஏற்படும் பட்சத்தில் அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்ற தீர்ப்பையும் வழங்கினர். அவைகளாவன:

1. **அறிவிப்பாளர்கள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்** (ஹதீஸ் அறிவிக்கும் மாணவன் தனது ஆசானிடம் ஹதீஸைப் பெற்றிருப்பதற்கான வாய்ப்பு)
2. **அறிவிப்பாளர்கள் எழுத்து வடிவிலோ, உள்ளத்திலோ ஹதீஸ்களைப் பிழையின்றி துல்லியமாக பதிவு செய்யும் ஆற்றலுள்ளவராக இருத்தல் வேண்டும்.**
3. **அறிவிப்பாளர்கள் நம்பத்தகுந்தவர்களாக இருத்தல் வேண்டும்.**
4. **நம்பிக்கையான ஒரு அறிவிப்பாளர் அவரைவிட நம்பகத்தன்மையுள்ள ஏனையோருக்கு முரண்படக்கூடாது.**
5. **நுணுக்கமான பகுப்பாய்வின் மூலமே அன்றி அறியப்பட முடியாத குறைகள் இல்லாதிருத்தல்.** உதாரணமாக ஸஹாபியின் கருத்தை தவறாக நபிகள் கூறியதாக ரிவாயத்துச் செய்தல்.

ஒரு ஹதீஸ் ஸஹீஹானது (ஸஹீஹ்) எனத் தீர்ப்பு வழங்க இந்த ஐந்து நிபந்தனைகளும் அவசியமாகும். மார்க்கத்தில் இல்லாதவைகள் மார்க்கம் என்ற பெயரில் நுழைந்து விடக்கூடாது என்ற தூய நோக்கிலேயே முன்சென்ற இமாம்களால் இப்படியான பகீரத முயற்சிகள் செய்யப்பட்டன. அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) கூறினார்கள்: "*الإسناد من الدين ولولا الإسناد لقال من شاء ما شاء*" அறிவிப்பாளர் வரிசை என்பது மார்க்கத்தில் உள்ளதாகும். (இஸ்னாத்) அறிவிப்பாளர் வரிசை இல்லாவிட்டால் நினைத்தவர்களெல்லாம் நினைத்ததையெல்லாம் சொல்லிவிடுவார்கள் (ஷர்ஹு முஸ்லிம் 1-81). எனவே இஸ்னாத் இன்றி ஹதீஸைத் தேடுபவர் இரவில் விறகு தேடுபவரைப் போன்றாகும். தனது கையில் சிக்கிய அனைத்தையும் விறகு என நினைத்து பொறுக்கிக் கொள்வார். இதே நிலைதான் இஸ்னாத் இன்றி ஹதீஸ் தேடுபவருக்கு ஏற்படும்.

இவ்வாறு இஸ்னாதுடன் ஒரு செய்தியை அறிவிக்கும் விஷேசத்துவம் ஏனைய உம்மத்தில் கிடையாது. இது நபிகளாரின் உம்மத்துக்கு நபியின் சொல், செயல், அங்கீகாரங்களைப் பாதுகாக்கக் கிடைத்த ஒரு பொக்கிஷமாகும்.

**ஆதாரத்துக்குரிய ஹதீஸ்கள் எவை?**

ஸுன்னா இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படை ஆதாரம். அதிலிருந்து ஒரு சட்டம் எடுக்கப்பட வேண்டுமாயின் அது ஸஹீஹான நம்பகமான ஹதீஸாக இருக்க வேண்டும் என்பது உலமாக்களின் ஏகோபித்த முடிவாகும். இமாம் நவவி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். فإنهم متفقون على أنه لا يحتج بالضعيف في الأحكام فإن كان
لا يعرف ضعفه لم يحل أن يهجم على الاحتجاج به من غير بحث عليه بالتفتيش عنه
إن كان عارفا أو بسؤال أهل العلم به إن لم يكن عارفا والله أعلم . شرح مسلم 1-113
அவர்கள் (உலமாக்கள்) சட்டங்களில் பலவீனமான ஹதீஸ்களை ஆதாரமாகக்கொள்ளக் கூடாது என்பதில் ஏகோபித்துள்ளனர். ஹதீஸின் பலவீனம் பற்றி அறியாத ஒருவர் அந்த ஹதீஸைப் பற்றி ஆராயும் திறன் அவரிடத்தில் இருந்தால் அதனை ஆராயாமல் ஆதாரமாக எடுப்பது அவருக்கு ஹலாலாக மாட்டாது ஆராயும் திறன் இல்லாவிட்டால் அறிவு உள்ளவர்களிடம் கேட்பது அவசியமாகும். (ஷர்ஹு முஸ்லிம் 1-113 )

அதனாலேயே ஹதீஸ்களை ஒன்று திரட்டிய நூல்கள் பல நூறுகளைத் தாண்டினாலும் அவற்றில் உள்ள ஹதீஸ்களில் ஏற்றுக் கொள்ளப்பட முடியுமான صحيح (ஸஹீஹ் - ஊர்ஜிதமானது) -எது மறுக்கப்பட வேண்டிய ضعيف (ழயீப் - பலயீனமானது) எது என உலமாக்கள் ஆராய்ந்து தீர்ப்பளித்துள்ளார்கள்.

இஸ்லாமிய சட்டத் தீர்ப்புக்கள் என்பது ஹலால், ஹராம், மக்ரூஃ. வாஜிப், ஸுன்னத் என ஐவகைப்படும். மேற்படித் தீர்ப்புக்களை வழங்குவதற்கு ஹதீஸ்களில் ஸஹீஹானவற்றைத் தவிர வேறெதனையும் ஆதாரமாகக் கொள்ள முடியாது. எனினும் فضائل – (ஃபலாஇல்) அதாவது அமல்களின் சிறப்புக்கள், ஆர்வமூட்டல், எச்சரிக்கை செய்தல் போன்றவற்றில் ضعيف ஆன ஹதீஸ்களைப் பயன்படுத்தலாமா என்பதில் உலமாக்களுக்கிடையில் சர்ச்சை இருக்கின்றது. சிறப்புக்களில் கூட பலவீனமான ஹதீஸ்களை எடுக்க முடியாது என ஒரு சாராரும், *சில நிபந்தனைகளோடு* எடுக்கலாம் என மற்றொரு சாராரும் கூறியுள்ளார்கள்.

**அல் ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அந்நிபந்தனைகளை பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.**

1: **பலவீனம் கடுமையில்லாமல் இருத்தல்.** *எனவே பொய் கூறுவோரினதோ, ஏராளமான தவறிழைப்போரினதோ அறிவிப்புக்கள் சிறப்புக்களில் கூட ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

2: **ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் ஒரு பொது அடிப்படையின் கீழ் அமைய வேண்டும்.** *அதாவது மார்க்கத்தில் புதிய வணக்கத்தையோ அல்லது புதிய முறையையோ அல்லது இருக்கும் வணக்கத்தில் மேலதிக எண்ணிக்கைகளையோ அல்லது மேலதிக எல்லைகளையோ அந்த ஹதீஸ் உருவாக்கக்கூடாது. மேலும் பொதுவாக உள்ள ஒரு வணக்கத்தை நேரத்தைக் கொண்டோ, இடத்தைக் கொண்டோ குறிப்பதாகவும் அமையக் கூடாது.*

3. **அதனைச் செய்பவர் அதனை ஸுன்னா என்ற நம்பிக்கையில் செய்யாதிருத்தல்.** *எனவே சிறப்புக்களிலும், ஆர்வமூட்டலிலும், எச்சரிக்கை செய்வதிலும் அறிவிப்பு (ரிவாயத்து) ச் செய்யலாம் என்பது, அதனால் சட்டம் இயற்றலாம் என்பதைக் குறிக்காது.* இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் பின்வரும் கூற்று இதனை உறுதிப்படுத்துகின்றது. *"ஹராம், ஹலால், ஸுன்னா இன்னும் சட்டங்கள் விடயத்தில் நாம் றஸூலுல்லாஹ்வைத் தொட்டும் அறிவித்தால் அறிவிப்பாளர்கள் விசயத்தில் கடுமையாக நடந்து கொள்வோம். இன்னும் ஒரு சட்டத்தை நிறுவும் அல்லது நீக்கும் விடயங்களிலல்லாது அமல்களின் சிறப்புக்கள் விடயத்தில் நாம் றஸூலுல்லாஹ்வைத் தொட்டும் அறிவித்தால் அறிவிப்பாளர் வரிசை விடயத்தில் கடுமையாக நடக்கமாட்டோம்.* (அல்-கிபாயா)

அஷ்ஷெய்க் யூஸுப் அல்-கர்ளாவி "ளயீபான ஹதீஸ்களை ஆர்வமூட்டுவதிலும், எச்சரிக்கை செய்வதிலும் ரிவாயத்துச் செய்யலாம்" *என்ற உலமாக்களின் கூற்றை பின்வருமாறு விளக்குகிறார். "ளயீபான ஹதீஸை ரிவாயத்துச் செய்ய அனுமதித்த உலமாக்கள் அதன் அறிவிப்பாளர் வரிசையில் கடுமையாக நடக்கத் தேவையில்லை என்பதன் அர்த்தம்; ஸஹீஹான ஆதாரங்களின் மூலம் சரி என்று உறுதி செய்யப்பட்ட அமல்களை பலவீனமான ஹதீஸ்கள் மூலம் தூண்டலாம் அல்லது ஸஹீஹான ஆதாரங்கள் மூலம் உறுதி செய்யப்பட்ட ஒரு தீமையை பலவீனமான ஹதீஸ்கள் மூலம் எச்சரிக்கலாம் என்பதாகும். மாறாக ஒரு செயல் சரி என்றோ, பிழையென்றோ ளயீபான ஹதீஸ்களின் மூலம் நிறுவலாம் என்ற கருத்தில் அவர்கள் சொல்லவில்லை எனினும் பொதுமக்களில் பலர் மாத்திரமல்ல முஹத்திஸீன்களில் சிலர் கூட நிபந்தனைகளுடன் ளயீபான ஹதீஸை அறிவிப்பதற்கும், அதனைக்கொண்டு ஒரு அமலை நிறுவுவதற்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்ளவில்லை."*
*كيف نتعامل مع السنة النبوية (பக்கம் - 79)*

ஸுன்னா என்ற சட்டம் கூற ளயீபான ஹதீஸ்களை பாவிக்க முடியாது என்பதையே முன்னைய கூற்றுக்களிலிருந்து விளங்கினோம். உதாரணமாக ளுஹாத் தொழுகை ஸஹீஹான ஹதீஸ் மூலம் தரிபட்ட ஒரு ஸுன்னாவாகும். அதன் சிறப்பு சம்பந்தமாக வந்த பல ளஈபான ஹதீஸ்கள் இருக்கின்றன. இவற்றை ஆர்வமூட்டும் நோக்கில் அறிவிக்கலாம் என்பதே இதன் அர்த்தமாகும். இன்று பலர் அமல்களின் சிறப்புக்களில் பலவீனமான ஹதீஸ்களைப் பாவிக்கலாம் என்ற கூற்றைத் தவறாகப் புரிந்து ஸுன்னத்தான அமல்களை நிறுவ பலவீனமான ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்கின்றனர்.

உதாரணம்: 01 - ஷஃபான் 15ம் நாள் இரவு பற்றி قوموا ليلها وصوموا نهارها அன்றைய இரவில் நின்று வணங்குங்கள் பகலில் நோன்பு பிடியுங்கள் என்ற ஹதீஸ் இப்னுமாஜாவில் பதிவாகியிருந்தாலும் அதில் வரக்கூடிய அறிவிப்பாளர்களில் ஒருவரான ابن أبي سبرة என்பவர் ஹதீஸ்களை இட்டுக்கட்டக் கூடியவர் என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) கூறியுள்ளார்கள். ஷஃபான் மாதத்தில் பொதுவாக நபி (ﷺ) அவர்கள் அதிகமாக நபிலான நோன்பு நோற்றிருக்கின்றார்கள். அதனடிப்படையில் பொதுவாக ஷஃபான் மாதத்தில் அதிகமாக நோன்பு நோற்பது ஸுன்னா என்று கூறுவதே தவிர குறிப்பாக ஷஃபான் 15ம் பிறையில் பராஅத் நோன்பு என்று கூறிக்கொண்டு நோன்பு நோற்பது ஸுன்னா என இந்த மிக பலவீனமான ஹதீஸைக் கொண்டு தீர்ப்புச் செய்ய முடியாது.

உதாரணம்: 02 - இகாமத்தில் قد قامت الصلاة எனப்படும் போது ரஸூலுல்லாஹ் أقامها الله وأدامها என்று கூறினார்கள் எனும் அபூ உமாமா அறிவிக்கும் ஹதீஸ் அபூதாவூதில் பதிவாகி இருந்தாலும் அதன் அறிவிப்பாளர் வரிசையில் رجل مجهول அறியப்படாத ஒருவர் இடம் பெற்றுள்ளார் என இமாம் முன்திரி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதனடிப்படையில் قد قامت الصلاة என்று கூறப்படும் போது أقامها الله وأدامها என்று சொல்வது ஸுன்னா என்று சட்டம் எடுப்பது முன் கூறப்பட்ட விதிகளுக்கு மாற்றமானதாகும்.

## *சில சந்தேகங்களும் தெளிவுகளும்*

ஹதீஸ்களை ஆராயத் தேவையில்லை. பலவீனமானமதாக இருந்தாலும் ரஸுல் (ﷺ) அவர்கள் சொன்னது தானே என அறிவீனமாக சிலர் பேசுகின்றனர். ஹதீஸ் பற்றி தெளிவான விளக்கமும் (تخريج) திறனாய்வு பற்றிய ஆளமான அறிவும் கொடுக்கப்படாததினாலேயே இவ்வாறு பேசுகின்றனர். فضائل களில் ளஈபை எடுக்கலாம் என்பது தவறாக விளங்கப்பட்டதன் விளைவாக இன்று فضائل களில் மட்டுமல்ல சட்டங்களிலும், நம்பிக்கைக் கோட்பாட்டு விடயங்களிலும் பலவீனமான, மிகப்பலவீனமான இன்னும் போலியான ஹதீஸ்கள் ஆதாரமாகக் கொள்ளப்படுவதைப் பரவலாகப் பார்க்கின்றோம். பலவீனமான ஹதீஸ்களை வீசி விடவா என்று கூறிக்கொண்டு; பத்திரிகை, வானொலி தொடக்கம் மிம்பர் மேடை வரை பலவீனமான ஹதீஸ்களைத் தாரளமாக மேற்கோள் காட்டுகின்றனர். அன்றைய இமாம்கள் சொன்ன விடயத்திற்கும் இன்று அதே இமாம்களை சான்றாக வைத்து முன்வைக்கப்படக் கூடிய கருத்துக்களுக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமிடையிலான வித்தியாசம் இருப்பதைப் பார்க்கின்றோம்.

இன்று மிம்பரில் ஏறக்கூடிய உலமாக்களில் அநேகமானோர் قال رسول الله என்று ஏதோ ஒரு கிதாபில் இருந்து விட்டால் அதனை ஹதீஸ் என்றும், ரஸூலுல்லாஹ் சொன்னார்கள் என்றும் கூறிவிடுகின்றனர். ஹதீஸை கிதாபுகளிலிருந்து எடுக்கும் ஒவ்வொருவரும் அது ஆதாரத்துக்கு எடுக்க முடியுமான ஹதீஸா, அது எங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது, போன்ற விடயங்களை இயன்றளவு ஆராய்ந்த பின்னரே அதை சமூகத்தில் முன்வைக்க வேண்டும். அறபு நூற்களில் இருக்கின்றது என்பதற்காக அதனை ஆராயாமல் எடுக்க முடியாது. إحياء علوم الدين , درة الناصحين , تنبيه الغافلين, تفسير الخازن , روح البيان , الترغيب والترهيب (இஹ்யா உலூமுத்தீன், துர்ரதுன் நாஸிஹீன், தன்பீஹுல் ஹாபிலீன், தப்ஸீர் ஹாஸின், ரூஹுல் பயான், தர்ஙீப் வதர்ஹீப்) போன்ற அறபுப் பாஷையில் எழுதப்பட்ட நூல்களில் பல ஆதாரமற்ற ஹதீஸ்கள் காணப்படுகின்றன. நுனிப்புல் மேய்வது போல் இவற்றை மேலோட்டமாகப் பார்த்தவர்கள் இவற்றில் உள்ளவற்றை ஹதீஸ்களாக முன்வைத்தனர். இதனால் சமூகத்தில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களும் அடிப்படையற்ற ஹதீஸ்களும் பரவின. அது மட்டுமல்லாது அகீதாவை (நம்பிக்கைக் கோட்பாட்டை)த் தகர்த்தெறியக் கூடிய ஹதீஸ்கள் பல சமூகத்தில் ஊடுருவியுள்ளன.

ஒரு கதீப் மிம்பரில் ஏறி அதன் அறிவிப்பாளர்களைப் பற்றி எதுவும் விளக்காமல் அறிவிக்கின்றார். இதனைப் பற்றி உங்கள் கருத்து யாது? என இப்னு ஹஜர் அல்ஹைதமி (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது பின்வருமாறு கூறுகிறார். *அறிவிப்பாளர்களைப் பற்றிப் பேசாமல் ஹதீஸ்களை அறிவிப்பது ஆகும். ஆனால் ஹதீஸ் பற்றி ஞானமுள்ளவராக அவர் இருக்க வேண்டும். அல்லது அவர் எந்த கிதாபிலிருந்து எடுத்தாரோ அதிலுள்ளவாறே அதை அறிவிக்க வேண்டும். ஆனாலும் ஹதீஸ்துறை சாராதோரின் கிதாபுகளில் இருப்பதைக் கண்டு அதில் நம்பிக்கை வைக்க மாட்டார். இவ்வாறு செய்வது ஆகாது. யார் இவ்வாறு செய்வாரோ அவர் கடுமையாக எச்சரிக்கப்படுவார். இன்று அதிகமான கதீப்மார்களின் நிலை இதுதான். அவர்கள் ஏதேனும் ஒரு கிதாபில் ஹதீஸ்களுடன் சேர்ந்த ஒரு குத்பாப் பேருரையைக் கண்டதும் அதனை எடுத்துச் சொல்லிவிடுகின்றனர். அவைகளுக்கு ஒரு அடிப்படை உண்டா இல்லையா என்பதைப் பார்ப்பதில்லை. ஊர் அதிகாரிகள் இவ்வாறானவர்களை எச்சரிக்கை செய்வதும், தடுத்து நிறுத்துவதும் அவசியமாகும். இப்படியான கதீப் மார்கள் தமது ஆதாரங்களை முன்வைப்பது அவசியமாகும். அது ஸஹீஹ் என்றால் ஏற்றுக்கொள்ளப்படும். இல்லாவிடின் இப்படிப்பட்டவர்களை ஆட்சேபிப்பது ஆகும். தகுதியில்லாமல் இப்படியான உயர்வான பதவிக்கு பயமின்றி முன்வந்ததறகாக ஊர் பொறுப்புதாரிகள் இப்படியானவர்களை குத்பாப் பிரசங்கம் செய்வதை விட்டும் தடுக்க வேண்டும்.* (பார்க்க - பதாவா ஹதீஸிய்யா பக்கம் : 32)

இப்பதில் அன்று ஹதீஸ்களை சரிவரத்தேடாமல் குத்பா பிரசங்கம் செய்வோரைப் பற்றி இமாம் இப்னு ஹஜர் ஹைதமி (ரஹ்) செய்த ஓர் எச்சரிக்கை இது இன்றைய காலத்திற்கும் மிகவும் பொருந்தும் என்பதை கவனத்தில் கொள்வோமாக. இவ்விடயத்தில் உலமாக்கள் மட்டுமல்ல பொது மக்களும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இன்னும் சிலர் ளயீபாக இருந்தாலும் இட்டுக் கட்டப்பட்டதாக இருந்தலும் (سند) அறிவிப்பாளர் வரிசையில்தான் பிரச்சினை (متن) விசயத்தில் அல்ல எனத் தவறாக விளக்கமளிக்கின்றனர். ஒரு ஹதீஸ் சரியானதா பிழையானதா என்பது அறிவிப்பாளர் வரிசையிலேயே தங்கியுள்ளது. அறிவிப்பாளர் வரிசையில் கோளாறுகள் ஏற்படும் போது ஹதீஸில் சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறது. அதன் பின்னர் அதனை ஆதாரமாகக் கொள்ள முடியாது. நபிகளார் சொன்னார்களா, இல்லையா என்ற சந்தேகத்துடன் வந்த ஒரு செய்தியின் மூலம் ஒரு சட்டம் வகுக்க முடியாது. அறிவிப்பாளர் வரிசையின்றி அல்லது அதன் நிபந்தனைகளின்றி அறிவிக்கப்படும் ஹதீஸ்கள் அத்திவாரமற்ற கட்டிடம் போலாகும்.

ஒரு ஹதீஸை யாராவது ளஈப் எனக் கூறினால்; இன்னொருவரால் அது ஸஹீஹ் எனப்பட்டிருக்கும் என்று சிலர் கூறுகின்றனர். ஒரு ஹதீஸ் பற்றி ஒருவர் ஸஹீஹ் என்றும், இன்னொருவர் ளயீப் என்றும் கூறினால்; ஸஹீஹ் என்றும் சொல்லப்பட்டுள்ளது தானே என கண்ணை மூடிக்கொண்டு எடுக்க முடியாது. மாறாக ஹதீஸ் பகுப்பாய்வுச் சட்டங்களுக்கு இணங்க அது ஆராயப்பட்டு அவ்விடயத்தில் ஒரு முடிவுக்கு வருவது அவசியமாகும்.

ஒரு ஹதீஸைப்பற்றி ஸஹீஹா, ளயீபா (உறுதியானதா, பலவீனமானதா) எனக்கேட்கப்பட்டால் சிலருக்கு கோபம் வந்து விடுகின்றது. ஸஹீஹும், ளஈபும் கேட்பதற்கு நீ யார்? உனது வாப்பா, வாப்பாவின் வாப்பா வந்த வழி உனக்குத் தெரியுமா? அதைக்கூட தெரியாமல் ஹதீஸ் வந்த வழி தேடி வந்து விட்டாயா? என்று கோபம் கொள்வோருமுள்ளனர். இப்படியான கேள்விகள் அறியாமையின் வெளிப்பாடாகும். ஒரு ஹதீஸைப்பற்றி ஸஹீஹா, ளயீபா என வினவ ஒவ்வொருவருக்கும் சுதந்திரமுண்டு. இப்படியான கேள்விகளுக்கு அறிவுரீதியான பதில்கள் சொல்வதைத் தவிர்த்து; கேள்வி கேட்டவரை மட்டம்தட்ட முயற்சிப்பது அழகல்ல.

மேலும் சிலர் ஒரு ஹதீஸைப் பற்றி ஸஹீஹ், ளஈப் எனப் பேசப்படும் போது இவர்கள் கம்பியூட்டர்களிலும் ஸீடீக்களிலும் உள்ளதனையே கூறுகின்றார்கள். இவர்களது ஆராய்ச்சி எதுவும் கிடையாது எனக் கூறி அப்பாவி மக்களை தவறான வழியில் செலுத்துகின்றனர்.

முன்னைய உலமாக்கள், இமாம்கள் வடிவமைத்த அப்புத்தகங்களையே இன்று ஸீடீக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதை இவர்கள் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். எனவே ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்கு முன்னர் செயல்பட்ட இமாம்களோடு இவர்களும் இணைகின்றார்கள் என்பதே உண்மை. இதனடிப்படையில் தான المكتبة الألفية போன்ற "ஸீடீ"க்கள் 3500 பழைய, புதிய புத்தகங்களை உள்ளடக்கி வெளிவந்திருப்பதை அவதானிக்கலாம். எனவே பல மணித்தியாலங்களை செலவு செய்து பல புத்தகங்களில் தேடும் பணியை இவ்வாறான "ஸீடீ"க்கள் சில வினாடிகளில் செய்து முடிப்பதைப் பார்க்கின்றோம்.

## சமூகத்தில் பரவியுள்ள தரமற்ற ஹதீஸ்களில் சில

சமூகத்தில் இன்று பரவியிருக்கக் கூடிய சில ஹதீஸ்களையும் அதன் தரம்களையும் சற்று ஆராய்வது சாலச் சிறந்ததாகும். அவ்வாறான ஹதீஸ்களில் பல ஒரு முஸ்லிமின் அகீதாவைத் தகர்த்தெறிவது மட்டுமல்லாமல் அவனை உண்மையான வழியில் இருந்து வழி தவறச் செய்யும் பல அடிப்படைகளைக் கொண்டதாக இருப்பதைப் பார்க்கின்றோம். சிறப்புக்களில் ளஈப்களைப் பாவிக்கலாம் என்ற முலாமின் மூலம் இஸ்லாமிய கொள்கைக் கோட்பாடுகள் கிழிக்கப்பட்டுள்ளது துரதிஷ்டவசமாகும். அவ்வாறான சில ஹதீஸ்களை நாம் கீழே பார்ப்போம்.

1. அல்லாஹுதஆலா ரஸூலுல்லாஹ்வைப் பார்த்து لولاك لولاك لما خلقت الأفلاك "நீங்கள் இல்லையென்றிருந்தால் இப் பிரபஞ்சங்களை படைத்திருக்க மாட்டேன் எனக் கூறப்படும் ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டது என பல இமாம்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கஷ்புல் ஹபா 2:148)

2 أول ما خلق الله نور نبيك يا جابر ஜாபிரே! அல்லாஹ் முதன் முதல் படைத்தது உம்முடைய நபியின் ஒளியைத்தான் என கூறப்படும் ஹதீஸ். இது இட்டுக்கட்டப்பட்டதாகும் என இமாம்களான ஸுயூதி, அல்பானி போன்றோர்கள் கூறியுள்ளார்கள். "அல்லாஹ் முதன் முதல் படைத்தது எழுதுகோளாகும்" எனும் ஸஹீஹான ஹதீஸிற்கு இது முரண்படுவதையும் பார்க்கலாம்.

3. إن الله أحيا أبويه له فأسلما على يديه அல்லாஹுதஆலா நபிகளாரின் பெற்றோர்களை உயிர்ப்பித்தான். பின்னர் அவர்கள் இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர் எனப்படும் ஹதீஸ் அடிப்படையற்றதாகும். மேலும் ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ள பின்வரும் ஹதீஸ் இதனைப் பொய்ப்பிக்கின்றது. **"நபிகளார் தனது தாயின் கப்ரைத் தரிசித்துவிட்டு அழுதார்கள். பக்கத்திலுள்ளவர்களை அழவைத்தார்கள் பின்பு கூறினார்கள். எனது தாய்க்காக பாவ மன்னிப்புக் கேட்பதற்கு எனது றப்பிடத்தில் உத்தரவு கேட்டேன் எனக்கு உத்தரவு கொடுக்கப்படவில்லை. பின்பு, எனது தாயைத் தரிசிக்க அவனிடத்தில் உத்தரவு கேட்டேன். எனக்கு அனுமதியளிக்கப்பட்டது. கப்றுகளைத் (ஸியாரத்) தரிசியுங்கள் நிச்சயமாக அது மரணத்தை ஞாபகப்படுத்தும். "** (முஸ்லிம்: 976)

4. اطلبوا العلم ولو بالصين "சீனா சென்றேனும் கல்வியைத் தேடு" எனும் ஹதீஸ் அடிப்படையற்ற இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸாகும். இதனை இப்னு ஹிப்பான் (ரஹ்) குறிப்பிட்டுள்ளார்கள் (அல்-மகாஸிதுல் ஹஸனா: 397)

5. من حج فلم يزرني فقد جفاني "யார் ஹஜ் செய்த பின்னர் என்னை ஸியாரத் செய்ய வில்லையோ அவர் என்னை வெறுத்துவிட்டார். இது மிகப் பலவீனமான அல்லது இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸாகும். (ஸில்ஸிலா-45, அல்-மௌளூஆத்- 2:127)

6. من حافظ على الصلاة أكرمه الله بخمس خصال... தொழுகையைப் பேணி தொழுபவருக்கு அல்லாஹுதஆலா ஐந்து உபகாரங்களைச் செய்கிறான். அதில் கவனக் குறைவாக நடப்பவருக்கு பதினைந்து விதமான தண்டனைகள் வழங்கப்படும் என்ற நீண்ட ஹதீஸ் அடிப்படையற்றதாகும். இப்படியான ஒரு ஹதீஸ்: நபிளாரின் ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டுள்ள தாய்க் கிரந்தங்களில் தேடிப்பார்த்தளவு கிடையாது.

7. الصلاة في مسجدي بخمسين ألف صلاة... "அல்-மஸ்ஜிதுல் நபவியில் தொழுவது ஐம்பதுனாயிரம் தொழுகைகளுக்குச் சமனாகும். எனப்படும் ஹதீஸ் மிகப் பலவீனமானது அதன் அறிவிப்பாளர்கள் அறியப்படாதோர் என இமாம் இப்னு மாகூலா குறிப்பிட்டுள்ளார்கள்." (தாரீஹ் பஃதாத் - 5:467) **"அல்-மஸ்ஜிதுல் ஹராமில் தொழுவது ஒரு இலட்சம் தொழுகைகளுக்குச் சமன் என்றும், அல்-மஸ்ஜிதுல் நபவியில் தொழுவது ஆயிரம் தொழுகைகளுக்குச் சமன்"** என்பதே புஹாரி, முஸ்லிமில் பதியப்பட்டுள்ள ஸஹீஹான ஹதீஸாகும்.

8. اذكروا الله حتى يقولوا مجنون (உன்னை) "பைத்தியகாரன் என்று சொல்லும் வரை நீ அல்லாஹ்வை திக்ரு செய்" எனப்படும் ஹதீஸும் மிகப்பலவீனமானதாகும்.

9. إن الله وملائكته يصلون على أصحاب العمائم "நிச்சயமாக அல்லாஹ்வும், வானவர்களும் தலைப்பாகை அணிந்தோர் மீது ஸலவாத் சொல்கிறார்கள்." "தலைப்பாகையுடன் தொழுவது தலைப்பாகையின்றி தொழுவதைவிட எழுபது மடங்கு சிறப்புடையதாகும்" போன்ற ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்டவைகளாகும். (அல்-மௌளூஆத் - 2:116)

10. أصحابي كالنجوم بأيهم اقتديتم اهتديتم எனது ஸஹாபாக்கள் நட்சத்திரங்களைப் போன்றாகும். அவர்களில் யாரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழி பெறுவீர்கள். எனும் ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதாகும். என இமாம் இப்னு அப்தில்பர் (ரஹ்) குறிப்பிட்டுள்ளார்கள். (ஸில்ஸிலா - 61)

مـن كـذب علـي متعمـدا فليتبـوأ مقعـده مـن النـار. **“என் மீது யார் பொய்யை இட்டுக்கட்டுக் கட்டி சொல்கிறாரோ அவரின் ஒதுங்கும் தளத்தை நரகில் ஒதுக்கிக் கொள்ளட்டும்”** என்ற நபிகளாரின் எச்சரிக்கையைக்கூட ஒரு பொருட்டாகக் கொள்ளப்படாததினால் அல்லது அறியாமையினால் சமூகத்தில் இப்படியான ஹதீஸ்கள் பரப்பப்பட்டன. إحياء علوم الدين (இஹ்யா உலூமித்தீன்) சமூகத்தில் பிரசித்தி பெற்ற ஒரு நூலாகும். அது இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களால் ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஆனாலும் அதில் ஏராளமான பலவீனமான, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் இடம்பெற்றிருப்பதை உணர்ந்த இமாம் அப்துர்ரஹீம் அல்இராக்கி (ரஹ்) அவர்கள் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவற்றை ஆய்வு செய்து அதில் இடம்பெற்றுள்ள பல ஹதீஸ்களுக்கு அதன் தரங்களைக் கூறி, வேறுபிரித்து இனங்காட்டினார். இது அவர்கள் செய்த பெரும் சேவையாகும். இது போன்ற இன்னும் பல நூல்கள் இப்படியான ஒரு பகுப்பாய்வின் பால் தேவைப்படுகின்றது. அன்று மக்களை நன்மையின்பால் ஆர்வம் ஊட்டுவதிலும், தீமையை விட்டும் எச்சரிக்கையூட்டுவதையும் நோக்காகக் கொண்ட சிலர் ஊர்ஜிதமானது, பலவீனமானது, இட்டுக்கட்டப்பட்டது போன்ற வித்தியாசங்களைக்கவனியாமல் புத்தகங்களிலும், பயான்களிலும் தாராளமாகப்பாவித்தனர். சிலவேளை அவர்களது நோக்கங்கள் நல்லதாக இருந்தாலும், அதனை ஹதீஸ்களை வல்லுனர்கள் இதனைச் சரிகாணவில்லை. இதனாலே சமூகத்தில் பரவியுள்ள போலியான ஹதீஸ்களை, இமாம்கள் காலத்திற்குக் காலம் இனங்காட்டத் தவறவில்லை.

ஆக ஒரு ஹதீஸை ரஸூலுல்லாஹ் சொன்னார்கள் அல்லது செய்தார்கள் என்று முன்வைப்பது மிகப் பொறுப்பான விடயம். நாம் நினைத்ததையெல்லாம் ஸுன்னா என்றோ இல்லையென்றோ சித்தரித்துக் காட்டுவது மாபெரும் தவறாகும். தேடாமல் அறியாமல் சொல்வது நபி மீது பொய்யைக் கட்டிச் சொல்வதற்குச் சமனாகும். அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக. மேலும் பொது மக்களிடத்தில் ளஈபான, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் முன்வைக்கப்படும் போது அவர்கள் நபியவர்கள் கூறியதாகவும், செய்ததாகவுமே கருதுகின்றனர். அதனை மற்றவர்களுக்கு சொல்லவும் செய்கின்றனர். இதனால் சமூகத்தில் பல மூட நம்பிக்கைகளும், பகுத்தறிவுக்கு முரணான கற்பனைக் கதைகளும் ஹதீஸ் எனும் பெயரில் பரவுவதைப் பார்க்கின்றோம்.

## *வணக்கத்தையும், வழக்கத்தையும் வேறு பிரிப்பது எவ்வாறு?*

ஸுன்னா என்பது நபிவழி. நபிவழிக்கு முரணாக புதிதாக மார்க்கம் என்ற பெயரில் (மார்க்கம் என நினைத்து) செயல்படுத்தப்படும் அனைத்து அனுஷ்டானங்களும் மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்ட பித்அத்களாகும். எனவே மார்க்கத்தில் உருவாக்கப்பட்ட அனைத்து பித்அத்களும் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். மாறாக உலகவிடயங்களில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவைகளில் எதனையும் மார்க்கரீதியில் பித்ஆ என வர்ணிக்கலாகாது.

ஒரு ஹதீஸ் ஆதாரமாகக் கொள்ளப்படமுன்னர் அந்த ஹதீஸ் உறுதியானதா என அறிவதோடு, அது எதைப் பற்றிப் பேசுகின்றது என்பதையும் விளங்கவேண்டும். அதன் பிறகு இதனை ரஸூல் (ﷺ) அவர்கள் மார்க்கம் என்ற தோரணையில் செய்தார்களா, சொன்னார்களா, அங்கீகரித்தார்களா அல்லது வழக்கம் என்ற அடிப்படையில் (வணக்கம் என்ற நோக்கம் இல்லாமல்) செய்தார்களா எனச் சிந்திக்க வேண்டும். அடுத்து, இது ரஸூலுல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியதா? அல்லது எல்லோருக்கும் பொதுவானதா எனவும் அறிய வேண்டும்.

இவ்விடயங்கள் யாவும் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பே அந்த ஸுன்னா ஒரு ஆதாரமாகக் கொள்ளப்பட முடியுமே தவிர விளங்காமலும், சரிவரப் புரியாமலும் அதனை ஆதாரமாகக் கொள்ள முடியாது. ஸுன்னாக்கள் மூன்று பிரிவுகளாக பங்கு பிரிகின்றன. அவையாவன,

1 - سنن العبادة **வணக்கம் சார்ந்த ஸுன்னாக்கள்**

2 - سنن العادة **வழமை சார்ந்த ஸுன்னாக்கள்**

3 - سنن جبلية **மனித இயல்பில் செய்த ஸுன்னாக்கள்**

## *வணக்கம் சார்ந்த ஸுன்னாக்கள்*

**வழக்கத்தையும் வணக்கத்தையும் வேறு பிரித்தறிய சில வழிகள்:**

1 - வணக்கம் எனப்படும் போது நபி (ﷺ) அதைச் செய்யும்படி ஏவி இருப்பார்கள்.

2 - ஏவியிருப்பதோடு சில வேளை வணக்கம் என்ற ரீதியில் அதனைச் செய்து காட்டியும் இருப்பார்கள்.

3- இன்னும் சில வேளை ஏவி செயல்படுத்தியதுமட்டுமன்றி அதனை அங்கீகரித்துமிருப்பார்கள்.

உதாரணம் I. நபிகளார் அதான் சொல்லுமாறு ஏவியிருக்கின்றார்கள். அதனை ஒரு இபாதத்தாகக் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் அதனை அங்கீகரித்தார்கள்.

உதாரணம் II. நபிகளார் மிஸ்வாக் செய்தார்கள். அதனைச் செய்யுமாறு வலியுறுத்தினார்கள்.

உதாரணம் III. ஒரு ஸஹாபி நடுநிலையின்போது سمع الله لمن حمده حمدا كثيرا طيبا مباركا فيه என்று ஓதிய தஸ்பீஹை நபிகளார் அங்கீகரித்தார்கள். எனவே வணக்கம் எனும் போது பெரும்பாலும் நபியவர்கள் அதனைச் செய்வதோடு மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளாமல் அதனை ஏவியுமிருப்பார்கள். அதற்குரிய சிறப்புக்களைக் கூறியிருப்பார்கள். நபிகளார் தாடியை வளர்த்தார்கள். வளர்க்கும் படி ஏவினார்கள். தாடி விடயத்தில் யஹூதிகளுக்கு மாற்றம் செய்யும் படி சொன்னார்கள். அதே போன்று நபிகளார் மீசையைக் கத்தரித்தார்கள். கத்தரிக்கும் படி ஏவினார்கள். அவ்விடயத்தில் யஹூதிகளுக்கு மாற்றம் செய்யும் படி பணித்தார்கள். மாறாக வழக்கம் சார்ந்த ஸுன்னாக்களைப் பொறுத்த வரையில் ரஸூலுல்லாஹ் (ﷺ) அவர்கள் செய்தாலும் கூட அதனை வணக்கம் என்ற தோரணையில் செய்திருக்கமாட்டார்கள். அதனைச் செய்யுமாறு தூண்டியிருக்கவும் மாட்டார்கள். அதற்கு இத்தனை நன்மை உண்டு என்று ஆர்வமூட்டியிருக்கமாட்டார்கள். பொதுவாக அதனை வழமைக்கு விட்டிருப்பார்கள்.

## *வழமை சார்ந்த ஸுன்னாக்கள்*

**நபிகளாரின் வழமைகளை பின்வரும் வழிகளில் இனங்காணலாம்.**

1. நபிகளார் அன்றாட வாழ்வில் ஒட்டகம், குதிரை, கழுதை, போனறவற்றில் பயணம் செய்தது, அரிக்கப்படாத மாவினால் செய்யப்பட்ட ரொட்டி உண்டது, கவச ஆடை மற்றும் வேட்டி, ஜுப்பா, தொப்பி, பல நிறங்களிலான தலைப்பபாகை, சால்வைகளை அணிந்தது போன்ற விடயங்களை; ***அக்கால வாகனம், உணவு, உடை, என்ற அடிப்படையில் நபியவர்கள் பயன்படுத்தினார்களே தவிர வணக்கம் என்பதாக நினைத்துச் செய்யவில்லை.*** குதிரையில், அல்லது கழுதையில் பயணம் செய்யுங்கள் என்றோ ரொட்டி சாப்பிடுங்கள், ஜுப்பா, தொப்பி அணியுங்கள், தலைப்பாகை சூடுங்கள், வேட்டி அணியுங்கள், என்றோ அவற்றைச் செய்தால் இவ்வளவு நன்மையுண்டு என்றோ சொல்லி அவற்றைத் தூண்டியதற்கு எந்தவொரு ஸஹீஹான ஹதீஸையும் காண முடியாது.

2. முன் சொல்லப்பட்ட அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட விடயங்களை நபித்துவத்திற்கு முன்னரும், பின்னரும் வித்தியாசமின்றி நபிகளார் செய்துள்ளார்கள். இவற்றில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. அதே போன்று இவற்றில் முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் இடையில் அன்று எந்த வித்தியாசமும் காணப்படவில்லை. அன்றைய மக்கள் பொதுவாகவே தொப்பி, தலைப்பாகை, ஜுப்பா போன்றவற்றை ஆடையாகப் பயன்படுத்தியுள்ளார்கள். இன்னும் சிலர் வேட்டியும் சால்வையும் அணிந்துள்ளனர். மேலும் வசதியற்றவர்கள் ஒரு துணியைக்கொண்டு மாத்திரம் போதுமாக்கிக் கொண்டுள்ளனர் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன.

3. ஸஹாபாக்கள் எகிப்து, ஷாம், பாரசீகம் போன்ற நாடுகளைக் கைப்பற்றிய போது அந்நாட்டு மக்களின் உடைகளை மாற்றுமாறோ, மக்கா மதீனா வாசிகளின் உடைகளைத்தான் நீங்களும் அணிய வேண்டும் என்றோ அவர்களை ஏவவில்லை. ஆடைகளின் வடிவமைப்புக்களில் ஒரு வணக்கம் இருக்குமாயின் அதனைக் காட்டிக்கொடுத்திருப்பார்கள்.

ஒருவர் நபியவர்கள் ஒன்றை உடுத்தார்கள், அல்லது சாப்பிட்டார்கள் என்பதற்காக அவரும் அதனை விரும்பிச் செய்வாரெனின் அதில் அவருக்குத் தாராள அனுமதி இருக்கின்றது. ரஸூலுல்லாஹ் அவர்களின் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடே அதுவாகும். அவ்வாறான ஒரு விடயத்தை எதிர்ப்பதும் கிண்டல் செய்வதும் ரஸூலுல்லாஹ் அவர்களின் ஒரு வழமையைக் கிண்டல் செய்த குற்றத்திற்கு ஆளாக வேண்டி வரும். ஆனால், இது ஒரு வணக்கத்துடன் தொடர்புடைய ஸுன்னா, எல்லோரும் இதைச் செய்ய வேண்டும், இன்னோரன்ன நன்மைகளெல்லாம் அதற்கு உண்டு என்றெல்லாம் யாரும் கூற முடியாது.

நபியவர்கள் இவற்றைச் செய்யும்போது பேண வேண்டிய வழிமுறைகளையும் ஒழுக்கங்களையும் எமக்குக் கற்றுத்தந்திருந்தால்; நாமும் அவ்வழிமுறையைப் பின்பற்றிச் செய்வது ஸுன்னாவாகும். அந்நிலையில் அவ்வொழுங்குமுறைகள் வணக்கமாகக் கருதப்படும். உதாரணமாக ஆடை மற்றும் பாதரட்சை போன்றவற்றை அணியும் போது வலதை முற்படுத்துதல், ஆண்கள் கரண்டைக்கு மேலால் அணிதல், உண்ணும் போது வலதால் சாப்பிடுதல், கையினால் சாப்பிட்டால் விரல்களைச் சூப்புதல்.

## *மனித இயல்பில் செய்த ஸுன்னாக்கள்*

**நபியவர்கள் மனிதன் என்ற வகையில் செய்த அன்றாட பழக்கவழக்கங்கள்**

நபியவர்கள் மனிதர் என்ற வகையில் மனிதர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய அம்சங்களைச் செய்தல். உதாரணம்: நிற்றல், உறங்குதல், மலசல கூடத் தேவைகளை நிறைவேற்றல். அவர்கள் இவற்றை வணக்கங்களாகச் செய்யவில்லை. மாறாக அவற்றைச் செய்யும் முறைகளில் வணக்கங்களைக் கற்றுத் தந்துள்ளார்கள். உதாரணமாக தூங்கும் முறைகள், மல சல கூடத்திற்குச் செல்லும் முறைகள். இந்த வகையும் செய் முறைகளில் வணக்கமாகக் கணிக்கப்படுகின்றது.

இன்னும் சில விடயங்கள் இருக்கின்றன. அவற்றின் அடிப்படை ஸுன்னாவாகும். ஆனாலும் அதனுடைய முறைகள் வழமையைச் சார்ந்தவையாகும். இதற்கு அடிப்படையிலேயே வழமையாக இருந்த சில விடயங்களைக் கூறலாம். உதாரணம்: திருமணம், வலீமா. இவை ஜாஹிலிய்யாக் காலத்திலுமிருந்தன. அதே போன்று அவர்களுக்கென்ற தனியான பழக்க வழக்கங்களும் இருந்தன. ஆனால் றஸூலுல்லாஹ் அவற்றில் அடிப்படையான நிகாஹையும், வலீமாவையும் வணக்கமாக எடுத்துக் காட்டினார்கள். அதற்குத் துணையாக அமையக் கூடிய பழக்க வழக்கங்களை வழமைக்கு விட்டுவிட்டார்கள். அன்று பெண் வீட்டுக்கு பெண் கேட்டுச் செல்வதும், அதே போன்று மாப்பிள்ளை வீட்டுக்கு மாப்பிள்ளை பேசிச் செல்லும் வழமையும் இருந்தன. அதேபோன்று பெண்ணிடத்தில் வசதி இருந்தால் பெண் வீட்டில் தங்குவதும் மாப்பிள்ளையிடத்தில் வசதியிருந்தால் மாப்பிள்ளை வீட்டில் தங்குவதும் இரண்டும் வழமையாக இருந்தன. ஆனால் இப்போது நடப்பது போன்று பெண்வீட்டாரிடத்தில் வற்புறுத்தி வீடு வாசல், பணம், நகை, வாகனங்கள் போன்றவற்றைக் கேட்பது ஒரு போதும் அனுமதிக்கப்படமாட்டாது.

வதிவிடம் கொடுக்கும் பொறுப்பு கணவனுடையது. ஆனால் மனைவி விட்டுக் கொடுத்து அவளுக்கென்றுள்ள வீட்டில் அவர்கள் இருவரும் வசிப்பதில் எந்த விதத் தவறும் கிடையாது. அதேபோன்று மஹ்ர் தொகையைக் கூட விட்டுக் கொடுக்க மனைவிக்கு உரிமையுண்டு. வசதியிருப்பின் பெண் வீட்டார் தமது விருப்பப்படி தமது மகளுக்குக் கொடுக்கின்றார்கள் என்பதற்கும்; மாப்பிள்ளை பெண் வீட்டாரிடம் கேட்டு வாங்குகின்றார் என்பதற்குமுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வது அவசியமாகும். இன்று மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டுக்கு அநாவசியமான பல செலவுகளை நிர்ப்பந்திக்கின்றார்கள். பெண்பார்க்கச் செல்வதிலிருந்து கல்யாணம் முடியும் வரையில் பல சிரமங்களைக் கொடுப்பது கண்டிக்கத்தக்கதாகும். இதனால் சொத்துரிமை விடயங்களில் ஒரு புறம் ஆண்கள் அநியாயம் செய்யப்படுகிறார்கள். எனவே சொத்துப்பங்கீடு விடயங்களில் நியாயமாக நடப்பது பெற்றோரின் பொறுப்பாகும்.

திருமண வீடுகளில் மாப்பிள்ளை வீட்டிலும், பெண்வீட்டிலும் வீண் விரயமின்றி பரஸ்பரம் விருந்துகள் போட்டுக் கொள்வதும், அன்பளிப்புக்கள் வழங்கிக் கொள்வதும் வழமைக்கு விடப்பட்ட ஒன்றாகும். அதே போன்று நீண்ட பிரயாணத்திலிருந்து வரக்கூடிய ஒருவருக்காக அல்லது மற்றும் வீடு குடிபுகுதல், கத்னா போன்ற வீட்டில் செய்யப்படக்கூடிய சந்தோசமான நிகழ்வுகளுக்காக விருந்துபசாரம் வழங்குதல் வழமைக்கு விடப்பட்டதொன்றாகும். இது ஒவ்வொருவரின் சொந்த விருப்பத்துக்குரியதாகும். இவ்வாறான விடயங்களில் வீண் விரயமோ, காபிர்களுக்கு ஒப்பாகுவதோ இடம் பெறக்கூடாது. அப்படி இடம் பெறுமாயின் அவ்விரண்டில் ஒன்றின் அடிப்படையில் அவ்வழமைகள் தடுக்கப்படுமே தவிர பித்அத் என்பதற்காக அல்ல. ஏனெனில் பித்ஆ என்பது மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு செயலை வணக்கமாகச் செய்வதாகும்.

இமாம் குர்துபி (ரஹ்) பித்ஆவுக்கு வரைவிலக்கணம் கூறும் போது பின்வருமாறு கூறுகின்றார்கள். طريقة في الدين مخترعة تضاهي الشرعية يقصد بالسلوك عليها المبالغة في التعبد لله سبحانه *"பித்அத் என்பது ஷரீஆ நடைமுறைக்கு ஒப்பாக மார்க்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையாகும். அதனைச் செய்வதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவதில் அளவு கடந்து செய்வது நாடப்படுகின்றது."*

இவ்வரைவிலக்கணத்தை விளங்கி விட்டாலே; பித்அத்திற்கும் ஸுன்னாவிற்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்ளலாம். சிலர் மேசையில் சாப்பிடுவது, கரண்டியால் சாப்பிடுவது போன்றவற்றையும் பித்ஆ எனக் கூறுவது உண்டு. அது ஒரு வழமையே தவிர அதனை யாரும் வணக்கமாகச் செய்வதில்லை. அதில் தடையேதும் கிடையாது. மாறாக வழமைகளில் அது அந்நியர்களுக்கென்று மாத்திரம் உள்ள பழக்கமென்று நிரூபிக்கப்பட்டால் அதனைத் தடை செய்யலாம். றஸூலுல்லாஹ் (ஸல்) இறைச்சி சாப்பிடும் பொழுது கத்தி போன்றவைகளையும் பாவித்துள்ளார்கள். சிலர் இன்று நடைமுறையில் உள்ள சில வழமைகளை பித்ஆ என குறிப்பிட்டிருப்பது மொழி ரீதியான பித்ஆவைக் குறிக்குமே தவிர மார்க்க ரீதியான பித்ஆவைக் குறிக்காது.

பொதுவாக வழக்கங்கள் விடயத்தில் தடைகள் கிடையாது. எப்போது அது மார்க்கத்திற்கு முரண் என விளங்கப்படுகிறதோ அப்போது அது தடுக்கப்படும். வணக்க விடயங்களில் எதைச் செய்வதாக இருந்தாலும் ஆதாரமின்றி அதைச் செய்வது தடையாகும். இந்த பொது அடிப்படையையே உலமாக்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள். الأصل في العبادات الحظر والأصل في العادات الإباحة *வணக்கங்களில் அடிப்படை தடையாகும். வழக்கங்களில் அடிப்படை அனுமதியாகும். எனவே வணக்கத்தைச் செய்யக் கூடிய ஒவ்வொருவரும் அதற்குரிய தக்க ஆதாரத்தைக் காட்ட வேண்டும். அதே போன்று வழமையைத் தடுக்கக்கூடிய ஒவ்வொருவரும் அதற்குரிய நியாயமான ஆதாரத்தைக் நிரூபிப்பது அவசியமாகும்.* இந்த விதி ஓர் உண்மையை உணர்த்துகிறது. நாம் ஒரு வணக்க வழிபாட்டை புதிதாக உருவாக்க முடியாது. வணக்கம் எது என தீர்மானிக்கும் அதிகாரம் அல்லாஹ்விற்கு மாத்திரமே சொந்தமானதாகும். والله أعلم

எனவே ஸுன்னாக்களையும், பித்ஆக்களையும் வேறு பிரித்தறிந்து நல்வழி நடந்த நல்லோர் கூட்டத்தில் நம்மனைவரையும் அல்லாஹ் தஆலா சேர்த்தருள்பாலிப்பானாக! ஆமீன்.

وآخر دعوانا أن الحمد لله رب العالمين

